# TNPSC துளிகள்

- இந்தியாவின் ஆரோக்கிய சேது என்ற செயலியானது உலகின் மிகப்பெரிய தடம் தொடர்பு கண்காணிப்புச் செயலியாக உருவெடுத்துள்ளது. இது 40 நாட்களில் மட்டும் 11 கோடி 40 லட்சம் மக்களைச் சென்றடைந்துள்ளது.
- சமீபத்தில் உலக சுகாதார அமைப்பானது விமர்சனத்திற்கு உள்ளான மலேரியா நோய் எதிர்ப்பு மருந்தான "ஹைட்ராக்ஸிகுளோரோகுயின்" என்ற மருந்தின் சோதனையை நிறுத்தி வைப்பதாக அறிவித்துள்ளது. இது கோவிட் - 19 சிகிச்சைக்குப் பயன்படுத்தப் படுகின்றது.
- கூகுள் பிளே ஸ்டோரானது கேரளாவில் மதுவை விநியோகிக்கப் பயன்படுத்தப்பட இருக்கும் "BevQ" என்ற செயலிக்கு வேண்டி தனது ஒப்புதல் வழங்கியுள்ளது.
- மத்திய அரசானது "MyGov" குழுவால் நடத்தப்பட இருக்கும் தீங்கு விளைவிக்கும் பிழை (BUG) கண்காணிப்புத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
  - இந்தத் திட்டமானது ஆரோக்கிய சேது செயலிக்குள் பாதுகாப்புக் குறைபாடுகளை கண்டுபிடிக்கும் பாதுகாப்பு ஆராய்ச்சியாளர்களுக்கு வெகுமதிகளை வழங்க வழிவகை செய்கின்றது.
- ஆங்கிலேய எழுத்தாளரான J.K. ரௌலிங் "The Ickabog" என்ற தனது புதிய குழந்தைகள் புத்தகத்தின் முதல் 2 அத்தியாயங்களை வெளியிட்டுள்ளார்.
  - 2007 ஆம் ஆண்டில் "ஹாரி பாட்டர்" மற்றும் "கொடிய புனிதம்" ஆகியவை வெளியிடப்பட்டதற்குப் பிறகு அவரது முதலாவது குழந்தைகள் புத்தகம் இதுவே ஆகும்.


# தேசியச் செய்திகள்

## சம்பா சுரங்கப் பாதை

- இது உத்தரகாண்டின் ரிஷிகேஷ்-தாராசு ரோடு தேசிய நெடுஞ்சாலையில் மிக அதிக மக்கள் தொகை பரவல் கொண்ட சம்பா நகரத்தின் கீழ், எல்லைச் சாலைகள் அமைப்பினால் (BRO - the Border Roads Organisation) அமைக்கப்பட்ட 440 மீட்டர் நீளம் கொண்ட ஒரு சுரங்கப் பாதையாகும்.
- இந்த சுரங்கப் பாதையானது மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள BROவினால் அமைக்கப் பட்டுள்ளது.
- இது சார்தாம் பரியோஜனா என்ற திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது பத்ரிநாத், கேதர்நாத், கங்கோத்திரி மற்றும் யமுனோத்திரி ஆகிய இந்து சமய புனிதத் தளங்களை இணைக்கும் வகையில் 900 கிலோ மீட்டர்

தொலைவுள்ள நெடுஞ்சாலைகளை மேம்படுத்தும் மற்றும் அகலப்படுத்தும் ஒரு முயற்சியாகும்.

- இந்தத் திட்டமானது மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தினால் மேற்கொள்ளப் படுகின்றது.




## ஜம்மு காஷ்மீருக்கான சட்டப்படியான வாழ்வகம் குறித்த விதிகள்

- மத்திய உள்துறை அமைச்சகமானது 2010 ஆம் ஆண்டின் சட்டமான "ஜம்மு காஷ்மீர் குடிமைப் பணிகள்" (அதிகாரப் பரவலாக்கம் மற்றும் ஆள்சேர்ப்புச் சட்டம்) என்ற ஒரு சட்டத்தைத் திருத்தியுள்ளது.
- இது "நிரந்தக் குடியிருப்பாளர்கள்" என்ற கூற்றுக்கு மாற்றாக அதனை "ஜம்மு காஷ்மீர் ஒன்றியத்தின் சட்டப்படியான வாழ்வகம்" என்பதைக் கொண்டு மாற்றியுள்ளது.
- இது ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டம், 2019-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்பு (மாநில சட்டங்களை ஏற்றுக் கொள்ளுதல்) ஆணை, 2020-ன் மூலமாக சட்டப்படியான வாழ்வகத்தை மறுவரையறை செய்கின்றது.
- 2010 ஆம் ஆண்டின் சட்டமானது "மாவட்ட, கோட்ட மற்றும் மாநில" அளவிலான பதவிகளைக் கொண்டுள்ள குடிமைப் பணிகளை அவர்களுக்கு உரித்தாக அறிவித்தது.
- இதற்கு முன்பு, ஜம்மு காஷ்மீரின் நிரந்தரக் குடியிருப்பாளர்கள் மட்டுமே அரசிதழ் பதிவு பெற்ற மற்றும் அரசிதழ் பதிவு பெறாத பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.
- "சட்டப்படியான வாழ்வகம்" என்ற சான்றிதழை வழங்குவதற்கான அதிகாரமானது

தாசில்தாரிடம் (வருவாய் அதிகாரி) உள்ளது.

***சட்டப்படியான வாழ்வகம் பற்றி***

- சட்டப்படியான வாழ்வகம் - ஒரு நபர் தனது நிரந்தர வாழ்விடமாக ஒரு நாட்டை குறிப்பதைக் குறிக்கின்றது.
- இது ஒருவர் தனது நிரந்தர இல்லத்தை ஒரு இடத்தில் ஏற்படுத்துவதைக் குறிக்கின்றது. அங்கு அவர் நிரந்தரக் குடியிருப்பாளராகக் கருதப்படுகின்றார்.
- ஒருவரின் சட்டப்படியான வாழ்வகத்திற்கு ஒரு உதாரணம் ஒருவர் வசிக்கும் சொந்த மாநிலமாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## FSDC

- சமீபத்தில் மத்திய அரசானது டிஜிட்டல் பொருளாதாரத்தின் மீது அதிகரிக்கப்பட்டு வரும் கவனத்தைக் கருத்தில் கொண்டு மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை செயலாளரை நிதியியல் நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சி ஆணையம் (FSDC - Financial Stability and Development Council) என்ற அமைப்பிற்குள் கொண்டு வந்துள்ளது.
- FSDC ஆனது 2010 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டதாகும்.
- இது மத்திய நிதி அமைச்சரால் தலைமை தாங்கப் படுகின்றது.
- இதன் உறுப்பினர்கள் பின்வருமாறு
    - இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர்
    - நிதித்துறை செயலாளர்/மத்தியப் பொருளாதார விவகாரங்கள் துறை
    - செயலாளர், நிதியியல் சேவைகள் துறை
    - தலைமைப் பொருளாதார ஆலோசகர், மத்திய நிதி அமைச்சகம்
    - இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் தலைவர்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## மேக வரைபடம்

- கனடா, அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்தைச் சேர்ந்த வானியல் துறை வல்லுநர்கள் ஒரு மேக வரைபடத்தை உருவாக்கியுள்ளனர்.
- இது வியாழன் கோளைப் போன்று இருக்கும் வெப்பமான வெளிக்கோள்களில் எந்த வகையான மேகம் இருக்கும் என்பதைக் கணிக்க உதவ இருக்கின்றது.

- இந்த மேகமானது பனிப்புகை மீத்தேன் கொண்ட பனியார்ந்த நிலையிலிருந்து நீலக் கடல் நிலை கொண்டதாக இருக்கும்.

## ஆர்டி-விளக்கை அடிப்படையாகக் கொண்ட சோதனை

- அறிவியல் மற்றும் தொழில்துறை மையத்தின் கீழ் இயங்கும் ஒருங்கிணைந்த மருத்துவத்திற்கான இந்திய நிறுவனம் (CSIR-IIIM/Council of Scientific & Industrial Research - Indian Institute of Integrative Medicine) மற்றும் ரிலையன்ஸ் தொழிற்துறை நிறுவனம் ஆகியவை இணைந்து கொரானா வைரஸ் நோய்த் தொற்றிற்காக இந்தச் சோதனையை உருவாக்கியுள்ளன.
- ஆர்டி-விளக்குச் சோதனை என்பது தலைகீழ் டிரான்ஸ்கிரிப்டேஸ்-வளையத்தை மையமாகக் கொண்டுள்ள மத்திய சமவெப்பப் பெருக்கம் என்பதைக் குறிக்கின்றது.
- உட்கரு அமிலத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தச் சோதனையானது நோயாளிகளின் நாசி மற்றும் தொண்டைச் சளி மாதிரியிலிருந்து மேற்கொள்ளப் படுகின்றது.
- தற்பொழுது கோவிட் - 19 சோதனையானது நிகழ்நேர - பிசிஆர் மூலம் மேற்கொள்ளப் படுகின்றது. இதன் உபகரணங்கள் அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப் படுகின்றன.
- மேலும் இது அதிக செலவு மிக்கதாகவும், அதிக மனித சக்தி தேவைப்படுவதாகவும் உள்ளது.
- மறுபுறம், ஆர்டி-விளக்குச் சோதனையானது குறைந்தபட்ச நிபுணத்துவத்துடன் அடிப்படை ஆய்வக அறிவுடன் ஒற்றைக் குழாயைக் கொண்டு மேற்கொள்ளப் படுகின்றது.





## விரைவான நிலையற்ற நீல ஒளியியல் (FBOT)

- ரேடியோ அலைநீளங்களில் வேகமாகவும் பிரகாசமாகவும் கனமாகவும் இருக்கும் ஒரு புதிய வானியல் நிலையற்ற நிலையானது கண்டறியப் பட்டுள்ளது.
- அமெரிக்காவின் வடமேற்குப் பல்கலைக்கழகத்தின் தலைமையிலான குழுவானது இதனை எக்ஸ் கதிர் மற்றும் ரேடியோ அலைநீளங்களில் சேகரிக்கப்பட்ட

மூன்றாவது வரைவான நிலையற்ற நீல ஒளியியல் (FBOT - Fast blue optical transient) என்று தீர்மானித்துள்ளது.

- ❖ பூமியிலிருந்து 500 பில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் ஒரு சிறிய விண்மீன் தொகுதியில் வானியல் அறிஞர்களால் 2016 ஆம் ஆண்டில் கண்ணிற்குப் புலப்பட்ட ஒரு பிரகாசமான வெடிப்பினைக் கண்டறிந்த நிகழ்விற்குப் பிறகு இது நிகழ்ந்துள்ளது.
- ❖ மிகவும் புகழ்பெற்ற FBOT என்பது A72018COW (The COW) - நியூட்ரான் நட்சத்திரம் அல்லது கருந்துளையின் உருவாக்கம் எனத் தோன்றிய ஒரு அரிய நிகழ்வு ஆகும்.




## SERS உணர்தல்

- ❖ நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையமானது மாலிப்டினம் டைசல்பைடின் கலப்புத் தன்மை கொண்ட இராமன் நிறப்பிரிகை (MoS2, ஒரு கனிமப் பொருள்) என்ற தங்க நானோ துகள்களுடன் மேற்பரப்பு - மேம்படுத்தப்பட்ட அலங்கரிக்கப்பட்ட ஒரு நானோ அமைப்பை உருவாக்கியுள்ளது (SERS - Surface-Enhanced Raman Spectroscopy).
- ❖ SERS என்பது பொதுவாகப் பயன்படுத்தப்படும் ஒரு உணர்திறன் நுட்பமாகும். இதில் மூலக்கூறுகள் வெள்ளி (அ) தங்க நானோ துகள்கள் போன்ற நெளி உலோக மேற்பரப்புகளில் உறிஞ்சப்படும் போது அவை நெகிழ்வற்ற ஒளிச்சிதறலால் பெரிதும் மேம்படுகின்றன.
- ❖ SERS கண்டறிதலானது அதன் மிக அதிக உணர்திறன் மற்றும் கைரேகை அங்கீகாரத் திறன் ஆகியவற்றின் காரணமாக பல்வேறுப் பகுப்பாய்வின் கண்டறிதலுக்காக வளர்ந்து வரும் மிக வலிமை வாய்ந்த ஒரு கூறாக விளங்குகின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★